**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

CC.No.38/2020
Prosecution witness.8

| | |
|---|---|
| பெயர் : திரு.நாகராஜன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of November 2024.

22.11.2024

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கில் முதற்கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் சீனிவாசன் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.04.2019 ம் தேதி 21.00 மணிக்கு கீழத்தூவல் காவல் நிலைய காவலர் ஐயப்பன் என்பவர் பொசுக்குடி கிராமத்தை சேர்ந்த இராமசாமி , த.பெ.கண்ணுசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்றுள்ளார்.

2) பின்பு சார்பு ஆய்வாளர் சீனிவாசன் புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.36/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) and 4 of TNPHW Act –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2**).

**3)** பின்பு 03.05.2019 அன்று 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான லோகநாதன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். (**மாதிரி**

**வரைபடம் அ.சா.ஆ.3. பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ).**

**4)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகள் இராமசாமி, பூர்ணவள்ளி, செல்வி, சித்திரைவேலு, சண்முகவேல், பாலசுருஷ்ணன், இலட்சுமி, லோகநாதன் மற்றும் பாலமுருகன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை. சார்பு ஆய்வாளர் திரு.சீனிவாசன் பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை நான் மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். மேற்படி சார்பு ஆய்வாளர் திரு.சீனிவாசன் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்த போது அவரிடம் கூறிய சங்கதிகளையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

**5)** பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) and 4 of TNPHW Act கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) சம்பவம் நடைபெற்று மறுநாள்தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 இராமசாமி மற்றும் அ.சா.2 பூர்ணவள்ளிக்கும் இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்படும் என்றால் சரிதான். குடும்ப பிரச்சனையில் அ.சா.1 இராமசாமிக்கு தீக்காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீக்காயம் சம்பந்தமாக அ.சா.1 இராமசாமி புகார் எதேனும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. யார் யாருக்கு எந்தெந்த ஆயுதத்தால் காயம் ஏற்பட்டது என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

2) இவ்வழக்கில் காயம்பட்டதாக குறிப்பிடப்படும் நபர்கள் யாரும் மருத்துவமனை செல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் அ.சா.1 ன் உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.1 வகையறாக்கள் எதிரிகளை தாக்கியதாக வழக்கு பதியப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரு தரப்பினர்களும் இடையே புகார் அளிக்கும்

போது யார் வரம்பு மீறியவர்கள் என்று  கண்டறிருந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

3) காவல் நிலைய ஆணை எண் விதி 566 இவ்வழக்கில் சரியாக பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிகள் ராமமூர்த்தி, காளீஸ்வரி  கொடுத்த புகாருக்கு இறுதியாக பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் லெட்சுமி என்பவர் காயம்பட்டதாகவோ காயம்பட்டதற்கு ஆவணங்களை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.  அ.சா.1 கொடுத்த பொய்யாக புகாரை முறையாக விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.